Registered as a Newspaper

# உதயன்



சுடர் : 41
கதிர் : 05

திங்கட்கிழமை
01 டிசெம்பர் 2025

கார்த்திகை 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## எரிபொருள் விலைகளில் மாற்றமில்லை

கொழும்பு, டிசெ.1
டிசெம்பர் மாதத்தில் எரி பொருள் விலை

>>>04

## எரிவாயுவுக்கு தட்டுப்பாடு இல்லை

கொழும்பு, டிசெ.1
வீட்டுப் பாவனைக் கான எரிவாயு

>>>04

## மழை விட்டபோதும் தொடரும் மண்சரிவு

கொழும்பு, டிசெ.1
மழையுடனான கால நிலை தணிந்

>>>11

## மீன்பிடிக்க சென்றவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.1
பொன்னாலை சிறு கடலில் நேற்று

>>>09

யாழ். திருநெல்வேலிச் சந்தியில்

# பட்டப்பகலில் இளைஞரொருவர் கொடூரமாக வெட்டிக்கொலை

யாழ்ப்பாணம், டிசெ.1
யாழ்ப்பாணம், திருநெல் வேலியில் நேற்றுப் பட்டப்ப கலில் ஒருவர் விரட்டி விரட்டி கொடூரமாக வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள் ளார்.
மோட்டார் சைக்கிள் ஒன் றில் இன்னொருவருடன் பயணித்த இளைஞர் ஒரு வரை, இரு மோட்டார்

>>>12

## மீள்கட்டமைப்புக்கு புதிய அலுவலகம்

ஜனாதிபதி அநுரகுமார உத்தரவு

கொழும்பு, டிசெ.1
அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகம் ஒன்றை பிரத மர் அலுவலகத்தை மைய மாகக் கொண்டு நிறுவு வதற்கான அறிவுறுத்

>>>11

## அனைத்து சேவைகளும் இன்றுமுதல் வழமைக்கு

கொழும்பு, டிசெ.1
பொது மற்றும் அத்தி யாவசிய சேவைகள்

>>>09

# வேறுபாடுகளை மறந்து நாட்டை மீட்க இணைக!

ஜனாதிபதி அநுர அழைப்பு



கொழும்பு, டிசெம்பர் 1
நாடு முன்னர் இருந்த நிலைக்குக் கொண்டுவரப்படும். அரசியல் பேதங்களை மறந்து இன, மத பேத மின்றி நாம் ஒன்று சேர்ந்து செயற்படுவோம். நாட்டைக் கட்டியெழுப்பிய பின்னர் பின்னர் நாங் கள் அரசியலைச் செய்வோம். நாட்டை கட்டியெ ழுப்பும் இந்த முயற்சிக்கு ஒத்துழைக்க நான் அழைப்பு விடுக்கிறேன்.

>>>12

## யாழ்., கிளி, வவுனியாவில் சுமார் 75,000 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.1
சீரற்ற காலநிலையால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் சுமார் 75 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பாதிப் புக்குள்ளாகி யுள்ளனர்.

>>>11

## மன்னார் மாவட்டத்தில் 80 ஆயிரம் பேர் பாதிப்பு

மன்னார், டிசெ.1
மன்னார் மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் 24 ஆயிரத்து 313 குடும்பங் களைச் சேர்ந்த 79 ஆயி ரத்து 946 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர் என்று

>>>11

## இயற்கைப் பேரழிவால் 334 பேர் உயிரிழப்பு!

370 பேர் மாயம்

10 இலட்சம் பேர் பாதிப்பு

தொடர்கின்றது மீட்புப் பணிகள்

கொழும்பு, டிசெ.1
இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று மதியம் வெளியிட்ட அறிக்கையின்படி, நாட்டில் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டவர்

>>>11

## மீட்புப்பணியில் ஈடுபட்ட ஹெலிகொப்டர் விபத்து!

விமானி உயிரிழப்பு

கொழும்பு, டிசெ.1
மீட்பு மற்றும் நிவாரண நட வடிக்கையில் ஈடுபட்டிருந்த இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று நேற்று மாலை விபத்துக் குள்ளாகியுள்ளது. ஹெலி கொப்டரில் இருந்த

>>>11

## 10,000க்கு அதிகமானோர் முல்லைத்தீவில் பாதிப்பு

தொலைத்தொடர்பு தடங்கலால் கணக்கெடுப்புகளில் தாமதம்

முல்லைத்தீவு, டிசெ.1
முல்லைத்தீவு மாவட்டத்தில் இயற்கைப் பேரி டர் பாதிப்புக்கள் காரணமாக 6 பிரதேச செயலர் பிரிவுகளில்

>>>12




## கல்வி நடவடிக்கைகள் டிசெ.8 வரை நிறுத்தம்

கொழும்பு, டிசெ.1
கல்வி, உயர்கல்வி மற் றும் தொழிற்கல்வி அமைச்சின்கீழ் உள்ள பல்க லைக்

>>>04

யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்டோருக்கு

## உணவு வழங்கல்களில் புதிய நடைமுறைகள்!

அறிவுறுத்தலை வழங்கினார் மாவட்டச் செயலர்

யாழ்ப்பாணம், டிசெ.1
யாழ்ப்பாணம் மாவட்டத் தில் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு சமைத்த உணவு அல்லது உலர் உணவுப்பொருள் களை வழங் குவது தொர்

>>>11

## உடைப்பெடுத்தது மாவிலாறு அணை

கிழக்கில் பல இடங்களில் கடுமையான பாதிப்புகள்



கொழும்பு, டிசெ.1
மகாவலி ஆற்றின் நீர்மட் டம் உயர்ந்துள்ள நிலை யில், நேற்று மாவிலாறு அணை உடைந்துள்ளது. இதனால் மூதூர், வெருகல், சேருவில ஆகிய இடங்கள் கடுமையான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன.
மாவிலாறு பிரதேசத்தில்

>>>11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருநாள் டித்வா நீடித்திருந்தால் வடக்கு – கிழக்கில் மரண ஓலம்!



## பேராசிரியர் பிரதீபராஜா சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், டிசெ. 1**

**டித்வா புயல் இன்னும் ஒரேயொரு நாள் இலங்கையில் நின்றிருந்தால், வடக்கு- கிழக்கு மாகாணங்களில் எங்கும் மரண ஓலம் கேட்டிருக்கும்-இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறைப் பேராசிரியர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

டித்வா நாட்டில் பேரழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. எனினும், இன்னும் ஒருநாள் இலங்கையில் நிலைத்திருந்தால் பேரழிவுகள் நிகழ்ந்திருக்கும். குறிப்பாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அதிகளவு உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கும்.

டித்வா புயலின் நகர்வில் பல தடவைகள் எனக்கு அதிக அச்சம் இருந்தது. ஏனெனில் அதன் நகர்வு அத்தகையது.

கடந்த 24ஆம் திகதியன்று தீவிர தாழமுக்கமாக அதன் நகர்வு வேகம் மணிக்கு 9 கிலோமீற்றராக இருந்தது. பின்னர் ஆழ்ந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலமாக மாறிய பின் மணிக்கு 11 கிலோமீற்றராக இருந்தது. பின்னர் புயலாக மாறியபோது சிறிது நேரம் மணிக்கு 14 கிலோமீற்றராக இருந்தது. பின்னர் மத்தியமலை நாட்டின் செல்வாக்குக் காரணமாக மணிக்கு 9 கிலோமீற்றராகக் குறைந்தது. பின்னர் மணிக்கு 4 கிலோமீற்றராகக் குறைந்தது.

உண்மையில் இந்த நேரத்தில் மிகப்பெரும் அச்சநிலை இருந்தது. ஏனெனில் ஒரு புயலின் நகர்வு வேகம் குறைந்தால் அது நிலைத்து நின்று பெரும் ஆபத்தை ஏற்படுத்தியிருக்கும்.

ஆனால் அது மத்திய மலைநாட்டின் செல்வாக்கிலிருந்து விடுபட்டு பொலநறுவைக்கு வந்த பின் மீண்டும் வேகமெடுத்து மணிக்கு 14 கிலோமீற்றர் வேகத்தில் நகர்ந்தது. பின்னர் மீண்டும் திருகோணமலைக்கு வந்து மீளவும் வேகம் குறைவடைந்து மணிக்கு 8 கிலோமீற்றராகக் குறைந்தது. இந்த நிலையில் மீண்டும் ஒரு அச்சநிலை ஏற்பட்டது. ஏனெனில் ஏற்கனவே வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு கனமழை கிடைத்துக்கொண்டிருந்தது. ஆனால் மீளவும் வேகமெடுத்து மணிக்கு 12 கிலோமீற்றர் என்ற வேகத்தில் கடலுக்குள் சென்றது.

புயலின் இரண்டு விடயங்களுக்கு மத்திய மலைநாடு காரணமாயிருந்தது. அதாவது. புயலின் நகர்வு வேகத்தையும் மையச் சுழற்சியின் வேகத்தையும் கட்டுப்படுத்தியது. மிகக்கனமழை பொழியவும் காரணமாக இருந்தது.

இலங்கையின் நவீன வரலாற்றில் நிகழ்ந்த ஆகப்பெரிய காலநிலை சார் இயற்கை அனர்த்தம் இதுவே. இது இலங்கையில் அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்திய இரண்டாவது இயற்கை அனர்த்தமாக மாறியுள்ளது. முதலாவது 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி. ஆனால் பொருளாதாரப் பாதிப்பினை ஏற்படுத்திய இயற்கை அனர்த்தங்களில் இதுவே முதலாவது. ஏனெனில் சுனாமியினுடைய பொருளாதாரப் பாதிப்புகள் கரையோரம் சார்ந்து மட்டுமே இருந்தது. ஆனால் டித்வா புயல் நாடு முழுவதும் பாதித்துள்ளது. இனனும் சில நாள்களில் தாக்க மதிப்பீட்டு அறிக்கை வரும்போது அதனை உணரலாம்-என்றார். (ம)

## மீன்பிடியில் ஈடுபடுவது தற்போதும் ஆபத்தே!

யாழ்ப்பாணம், டிசெ. 1

டித்வா புயல் நீங்கியிருந்தாலும், மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவது தற்போதும் ஆபத்தானது என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் துறைசார் அதிகாரிகள் தெரிவித்ததாவது:-

டித்வா புயல் நீங்கியிருந்தாலும், கடற்பகுதிகள் தொடர்ந்தும் கொந்தளிப்புடனும் ஆபத்தான அலைகளுடனும் காணப்படுகின்றன. குறிப்பாக, வடக்கு, மேற்கு மற்றும் கிழக்குப் பகுதிக் கடல்கள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்வது ஆபத்தானது. எனவே, மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடாமல் இருப்பதே தற்போது புத்திசாலித்தனமான விடயம் - என்றனர். (ம)

## ஜனாதிபதியின் மேற்பார்வையில் மீட்பு நடவடிக்கை

மாவிலாறு அணைக்கட்டு உடைந்ததை அடுத்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கியவர்களை மீட்கும் நடவடிக்கை ஜனாதிபதி அநுரகுமாரவின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்பட்டுள்ளது.

தங்கவேலி என்ற கிராமத்தில் சுமார் ஆயிரம் பேர் சிக்கிக்கொண்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. மூதூர் மற்றும் நீலபொல பிரதேசங்களில் உள்ள மக்களை நேற்றுமுன்தினம் இரவே வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கிண்ணியா நகரம் தற்போது முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. அங்கு சிக்கியுள்ளவர்களை மீட்க கடற்படை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. சோமபுர, சிறிமங்கலபுர, கல்யார், தெஹிவத்த ஆகிய பிரதேசங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அந்தப் பிரதேச மக்கள் தற்போது சேருநுவர நவோதயா பாடசாலைக்கு வான்வழியாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்றும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (அ-எ-இ)

### வடக்கு மாகாணத்தில்

## வான்பாயும் குளங்களில் நீர்மட்டம் கட்டுப்பாட்டில்

யாழ்ப்பாணம், டிசெ.1

வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஆளுகைக்கு உட்பட்ட 54 நீர்ப்பாசனத் திட்டங்களில் நேற்று மாலை வரை மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளில் 51 குளங்கள் வான் பாய்கின்றன. ஆயினும் அந்தக்குளங்களில் வான் பாயும் நீரின் அளவு கணிசமான அளவு குறைந்துள்ளது என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி த.இராஜகோபு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நண்பகல் 40 அடி 3 அங்குலமாக காணப்பட்ட இரணைமடு குளத்தின் நீர்மட்டம் நேற்று மாலை 5 மணியளவில் 37 அடியாக குறைவடைந்துள்ளது. குளத்துக்கான நீர் வரத்து மணித்தியாலத்துக்கு 0.794 மில்லியன் கன மீற்றராகக் குறைந்துள்ளது. ஆரைக்கதவுகள் படிப்படியாக மூடப்பட்டு வெளியேற்றப்படும் நீரின் அளவும் அதே அளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திலுள்ள வெலிமருதமடுக்குளம் , கூராய்க்குளம் என்பன உடைப்பெடுத்துள்ளன. வெலிமருதமடு குளத்துக்கு மேலுள்ள பெரியமடு குளத்தின் வான் நீர் பெருமளவில் வந்தமையே இதற்குக் காரணமாகும். அதே வேளை, பறங்கியாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் கூராய்க் குளம் உடைப்பெடுத்துள்ளது.

அதிக மழைவீழ்ச்சி மற்றும் வான் பாய்தல் காரணமாக வவுனியா மாவட்டத்திலுள்ள பம்பைமடு, வவுனியா குளம், மகாகச்சகொடிய குளம், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முத்துஐயன்கட்டு குளம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணைமடு ஆகியவற்றின் வான் பாதையிலுள்ள தடுப்பணைகள் உடைப்பெடுத்துள்ளன.

முத்துஐயன்கட்டு குளத்தின் வான் கதவுகள் மூடப்பட்டுள்ள போதும், வான் பாதையில் அதிக பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

குளங்களின் முழுமையான உடைப்பைத் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, வவுனியா மாவட்டத்திலுள்ள கல்மடு, பெரியதம்பனை, அலியாமருதமடு, கனகராயன்குளம், மன்னார் மாவட்டத்திலுள்ள பெரியமடு, கிளிநொச்சியிலுள்ள புழுதியாறு மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வவுனிக்குளம், உடையார்கட்டு, தட்டயர்மலைக்குளம் ஆகியவற்றின் வால்கட்டு பகுதிகள் வெட்டப்பட்டு நீர்மட்டம் குறைக்கப்பட்டு வருகின்றது.

தற்போது மழைவீழ்ச்சி மிகவும் குறைவடைந்துள்ளது. நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் களத்துக்குச் சென்று சீரமைப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் - என்றுள்ளது. (அ-எ-26)

## காய்ச்சலால் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், டிசெ.1

யாழ்ப்பாணம், புங்குடுதீவில் காய்ச்சல் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புங்குடுதீவு, 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தனபாலசிங்கம் ரேணுகாதரன் (வயது-49) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 27ஆம் திகதி மாலை அவருக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. மறுநாள் மதியம் அவர் உணர்விழந்த நிலையில், மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். ஆயினும் அதற்கு முன்னதாகவே அவர் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## தொடுவாய் வெட்டச்சென்ற கடற்படையினர் ஐவர் மாயம்

சுண்டிக்குளம் சாலை பிரதேசத்தில் தொடுவாய் வெட்டச் சென்ற ஐந்து கடற்படையினர் கடந்த வெள்ளிக்கிழமை காணாமல் போயுள்ளனர். அவர்களைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சுண்டிக்குளம்,சாலை பகுதியிலும் வெள்ளம் பெருக்கெடுத்த நிலையில், அங்குள்ள கடற்படை முகாம் உள்ளிட்ட பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்பட்டது. வெள்ள நீரை கடலுக்குள் விடும் முயற்சியில் கடந்த வெள்ளிக் கிழமை தொடுவாய் வெட்டுவதற்காக சென்ற சாலை கடற்படை முகாமை சேர்ந்த ஐந்து கடற்படையினரே காணாமல் போயுள்ளனர்.

காணாமல் போனவர்களை தேடும் பணி நேற்று மூன்றாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்ட நிலையில் மீட்பு நடவடிக்கை இடை நிறுத்தப்பட்டுள்ளது. மீண்டும் இன்று தேடும் பணி ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தையும் விழுங்க நெருங்குகின்றது டித்வா!



**சென்னை, டிசெ. 1**

**இலங்கையில் பேரழிவுகளை ஏற்படுத்திய டித்வா புயல், மேலும் வலுப்பெற்று தமிழகத்தை நெருங்கியுள்ளது என்று காலநிலை ஆய்வாளர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.**

தற்போதைய நிலவரத்தின் படி தமிழகத்தின் புதுச்சேரிக்கு அண்மித்த பகுதிகளை புயல் தாக்குவதற்கு வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகின்றது. தற்போதைய வேகத்தின் அடிப்படையில் பார்த்தால், இன்று நண்பகல் அல்லது இரவு சென்னைக்கும் புதுச்சேரிக்கும் இடைப்பட்ட பகுதியை புயல் நெருங்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

முன்னேற்பாட்டு நடவடிக்கையாக இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் வெளியேற்றப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தமிழக அரசின் ஏற்பாட்டில் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன், மீட்பு நடவடிக்கைகளுக்காக நூற்றுக்கும் மேற்பட்ட தனிப்படைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

சீரற்ற காலநிலை காரணமாக, சென்னையில் இரண்டாவது நாளாக நூற்றுக்கும் மேற்பட்ட விமானப் பயணங்கள் நேற்று இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

மேலும் இரு நாள்களுக்கு அங்கு இந்த அசாதாரண நிலைமை தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

### பேரழிவு நிலையிலும்

## செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதில் மும்முரம்!

டித்வா புயலால் பேரழிவு ஏற்பட்டுள்ள நிலையிலும் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதில் மக்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர் என்று அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

நாட்டில் இருநூறுக்கும் மேற்பட்ட பாதைகள் துண்டாடப்பட்டு போக்குவரத்து முடக்க நிலையை அடைந்துள்ளது. இதையடுத்தே, பொருள்கள் வருவதற்கு தாமதமாகலாம் என்ற அச்சத்தில் மக்கள் அளவுக்கதிகமாக பொருட்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதேவேளை, பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சத்தைக் காரணம் காட்டி சில வர்த்தகர்கள் பொருள்களின் விலைகளை அதிகரித்து விற்கின்றனர் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இதுதொடர்பில் தேடுதல் நடத்த நுகர்வோர் அதிகாரசபை நடவடிக்கை எடுத்துவருகின்றது எனவும் தெரியவருகின்றது. (ம-41,17)



## முற்றாகச் சிதிலமடைந்தது ஊர்காவற்றுறை இறங்குதுறை

யாழ்ப்பாணம், டிசெ. 1

டித்வா புயல் காரணமாக ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் இறங்குதுறை மோசமாக சேதமடைந்துள்ளது.

சீரற்ற வானிலை காரணமாக, அந்த இறங்குதுறை ஊடான படகுச் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில், சீரமைப்புப் பணிகளை விரைவில் மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-41,9)

# மன்னார் குஞ்சுக்குளத்தில் சிக்கிய மூவர் விமானப்படையால் மீட்பு!

மன்னார், டிசெ. 1

புயல் மற்றும் மல்வத்து ஓயா ஆற்று வெள்ளம் காரணமாக கடந்த மூன்று நாள்களாக குஞ்சுக்குளம் தேக்கம் அணைக்கட்டுப் பகுதியில் சிக்கித்தவித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் நேற்றுப் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் தொடர் முயற்சியின் பயனாக இந்த மீட்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அவர்கள், வவுனியா ஜோசப் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் வவுனியா மருத்துவமனையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மன்னார் மாவட்டத்தின் ஏனைய பல இடங்களில் சிக்கித் தவிப்பவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை விமானப் படை முன்னெடுத்து வருகின்ற போதும் சீரற்ற வானிலை காரணமாக மீட்புப் பணிகள் தாமதமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம






## காவல் தானே ஆஸ்பத்திரிக்கு அழகு

தினக்குத் தனக்கெண்டால் மட்டும்தான் சுளகு படக்குப் படக்கெண்டு அடிக்குமாம். ஆஸ்பத்திரியளில காவலுக்கு நிக்கிற பொலிஸ்காரரின்ர வேலையளும் இப்ப அப்பிடித்தான் இருக்குது. கிட்டடியில தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில ஒரு சம்பவம். ஒரு பதினாலு வயதுப் பெடியனொருத்தனை றோட்டில ஒரு வாகனம் அடிச்சு, கடும்காயத்தோட தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு கொண்டந்திருக்கினம். அவசரமான கேஸ் எண்டதால, டொக்டர்மாரெல்லாம் விழுந்தடிச்சு வந்து, அந்தப் பெடியனுக்குத் தேவையான அவசர சிகிச்சையளைச் செய்து, ஆளைப் பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி அவனை எப்பிடியாவது காப்பாத்தோணும் எண்டு போராடிக்கொண்டிருந்திருக்கினம். ஆனால் அதுக்குள்ள சுடுகுது மடியைப்பிடி எண்ட கணக்கில, அந்தக் காயம்பட்ட பெடியன்ர சொந்தக்காரர் பெரும் களேபரம் செய்திருக்கினம். இத்தனைக்கும் எல்லா வேலையளையும் விட்டுப்போட்டு டொக்டர்மாரும், நேர்ஸ்மாரும் அந்தப் பெடியன்ர உயிரைக் காப்பாத்துற வேலையிலமட்டும் தான் இருந்திருக்கினம். ஆனால் அவையை ஒழுங்கா வேலை செய்யவிடாமல், அந்தப் பெடியன்ர சொந்தக்காரர் குழப்பிக் கொண்டே நிண்டிருக்கினம். ஒருகட்டத்தில அவையள் அந்தப் பெடியனுக்கு சிகிச்சை குடுத்துக்கொண்டிருந்த அவசரசிகிச்சைப் பிரிவுக்குள்ளையும் புகுந்து பெரும் அட்டகாசம் செய்யத் தொடங்கிட்டினம். எதுக்குச் சத்தம் போடுகினம் எண்டே ஒருத்தருக்கும் விளங்கேலை.

கடைசியா அந்தப்பெடியனுக்குச் செய்யவேண்டிய அவசர சிகிச்சையெல்லாம் செய்து அம்புலன்ஸில யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டுபோக வெளிக்கிட, சொந்தக்காரரில ஒராள் மெயின் கேற்றடிக்கு முன்னால போய் நிண்டு கொண்டு 'அம்புலன்ஸை விடமாட்டன்' எண்டு கத்தத் தொடங்கிட்டார். பிறகு ஒருமாதிரி அவரைக் கஷ்டப்பட்டு டொக்டர்மாரும், பணியாளர்மாரும் அங்கால போகப்பண்ணின பிறகுதான் அம்புலன்ஸ் போனது. எவ்வளவு வேளைக்கு அம்புலன்ஸ் பெரியாஸ்பத்திரிக்குப் போகுதோ அவ்வளவுக்கு அந்தப்பெடியன்ர உயிரைக் காப்பாத்தச் சான்ஸ் கூட எண்டது, கேற்றை மறிச்சுக்கொண்டு நிண்டதுக்குத் தெரியேலை. இவ்வளவு கூத்தும் நடந்தும் கூட, அந்த ஆஸ்பத்திரியில நிக்கிற பொலிஸ்காரர், சிலை மாதிரி நிண்டு வேடிக்கை பார்த்தவரே தவிர, பிரச்சினை செய்தவையை அப்புறப்படுத்தவோ, கட்டுப்படுத்தவோ ஒரு முயற்சியும் எடுக்கேலையாம்.

முந்தியும் ஒருக்கா அந்த ஆஸ்பத்திரியில பொம்பிளை ஒராள் புகுந்து அட்டகாசம் பண்ணி, பெரும் குழப்பம் நடந்தது.அதுக்கு முறைப்பாடு போட்டும் இன்னும் ஒரு நடவடிக்கையும் எடுக்கேலை. அந்தச் சூடு ஆறமுதல், இன்னொரு சம்பவமும் இப்ப நடந்திருக்கு. அதையும் பொலிஸ்காரர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்திருக்கிறார். அப்பிடியிருந்தால், எப்பிடி டாக்குத்தர்மார் பயமில்லாம அந்த ஆஸ்பத்திரியில வேலை செய்யமுடியும்? எப்ப ஆர் வந்து அடிப்பினம்? எப்ப குழப்பம் செய்வினம்? ஆர் வந்து சண்டை பிடிப்பினம்? எண்ட ரென்சனில டாக்குத்தர்மார் இருந்தால், அவையால தங்கட வேலையையும் ஒழுங்காச் செய்யேலாமல் போடுமெல்லோ. கட்டுக்காவல் ஒழுங்கா இல்லாத இடத்தில எப்பிடி நிம்மதியா வேலை செய்யமுடியும்? அதுவும் ஆஸ்பத்திரி எண்டது கோயில் மாதிரி. டாக்குத்தர்மார் ஒரு சின்னப்பிழை விட்டாலும் அது வருத்தக்காரரின்ர உயிருக்குத்தான் உலைவைச்சுப்போடும். அப்ப அவையின்ர வேலையையும், மனதையும் குழப்பாதமாதிரித்தான் ஆஸ்பத்திரிச் சூழல் இருக்கோணும். டாக்குத்தர் தங்களுக்குப் பாதுகாப்பில்லை எண்டு பயந்து கொண்டிருந்தால் அது வருத்தக்காரருக்குத்தான் ஆபத்துக் கண்டியளோ? இனியாவது அவையின்ர பாதுகாப்பை உறுதிப்படுத்திற வழியை உரியவை பாப்பினமோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்குத் திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். முக்கியமான பிரமுகர்களின் தொடர்பு கிடைக்கும். மூத்த சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதியமுயற்சி அனுகூலமாக முடியும். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தொலைபேசி மூலம் சுபச்செய்தி ஒன்று கிடைக்க வாய்ப்பு உண்டு.

**கடகம்:** தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகமுடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியைக் காலையிலேயே தொடங்குவது நல்லது.

**சிம்மம்:** புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படும் என்பதால், வார்த்தைகளில் நிதானம் தேவை. தாயின் உடல்நலனில் கவனம் தேவை.

**கன்னி:** இன்று மனதில் அவ்வப்போது சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். மாலையில் உறவினர் ஒருவர் மூலம் சுபச்செய்தி ஒன்று கிடைக்க வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். சிலருக்குத் தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும்.


**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். கூடியவரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ள வேண்டாம். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக் கொள்வார். நீண்டநாளாகத் தொடர்பில் இல்லாத நண்பர்கள் தொடர்புகொண்டு பேசுவார்கள்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** மனதில் தைரியமும் உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.





பிரித்தானியாவின், ஒக்ஸ் போர்ட் நகரில், உலகத் தமிழர் வரலாற்று வளாகத்தில் கடந்த நவம்பர் 27ஆம் திகதி மாவீரர்நாள் பேரெழுச்சியுடன் நினைவேந்தப்பட்டது. பிரித்தானியாவின் பல பாகங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கானோர் இந்த வளாகத்தில் ஒன்று திரண்டு, மலரஞ்சலி செலுத்தி, தீபங்கள் ஏற்றி மாவீரர்களைக் கண்ணீர் மல்க அஞ்சலித்தனர். (க-17)

## இளம் குடும்பஸ்தர் காய்ச்சலால் மரணம்

யாழ்ப்பாணம், டிசெ.1

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கிளிநொச்சியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சசிகரன் (வயது-31) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 8ஆம் திகதி காய்ச்சலால் பீடிக்கப்பட்ட அவர், சிகிச்சை எதுவும் எடுத்துக்கொள்ளாமல் இருந்துள்ளார். எனினும் கடந்த 22ஆம் திகதி காய்ச்சல் நிலைமை மோசமடைந்ததை அடுத்து அவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் காலை உயிரிழந்துள்ளார்.

இறப்ப விசாரணைகளைத் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## சீரானது ஏ - 9 வீதியூடான போக்குவரத்து

யாழ்ப்பாணம், டிசெ.1

ஏ9 வீதியில் ஏற்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட்டு போக்குவரத்து சீர் செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வெள்ள இடரை அடுத்து ஏ-9 வீதியின் பல இடங்களில் தடைகள் ஏற்பட்டிருந்தன. அதனால் ஏ9 வீதியூடான கொழும்புப் பயணங்கள் தடை செய்யப்பட்டிருந்த நிலையில் தற்போது நிலைமை சீர் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

### கல்வி...

கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழிற்கல்வி நிறுவனங்களில் எதிர்வரும் 8 ஆம் திகதிவரை அனைத்து கல்வி நடவடிக்கைகளும் நிறுத்தி வைக்கப்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (அ-எ-26)

### எரிபொருள்...

களில் எந்தவிதமான திருத்தங்களும் மேற்கொள்ளப்படாது என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

தற்போது நடைமுறையில் இருக்கும் எரிபொருள்களின் விலைகள் டிசெம்பர் மாதம் முழுவதும் தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-இ)

### எரிவாயுவுக்கு...

சிலிண்டர்களின் கையிருப்பு போதுமான அளவு உள்ளது என்று லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது. எரிவாயு நிரப்பும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன என்றும், அனர்த்தம் காரணமாக செல்ல முடியாத பகுதிகளுக்கு எரிவாயு விநியோகத்தை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த நிறுவனம் கூறியுள்ளது. எரிவாயுவைப் பெறுவது தொடர்பான தகவல்களை 1311 என்ற துரித இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக் [illegible] லிட்ரோ எரிவாயு நிறு வனம் [illegible] (அ-எ-இ)

## மரண அறிவித்தல்



### திருமதி தம்பித்துரை ஜெயமணி

கரம்பனைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் முதலி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பித்துரை ஜெயமணி அவர்கள் நேற்று (30.11.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேசிங்கம் - அன்னக்கிளி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பித்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான குருநாதர், குணசிங்கம், தங்கராசா, நடேசமணி, தங்கமணி, சுதந்திராதேவி, இராசசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுதாகர், சுவர்ணன், சுபோதினி, சுபைதா ஆகியோரின் அன்புத் தாயாரும், மஞ்சுளா, சித்திராதேவி, சிங்கராசா, சந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், லக்ஷனா, அபிஷா, காலஞ்சென்ற ஆஜீஷ் மற்றும் டிலானி, டினேஸ், டினுஜா, கோபிகா, பாதுசன் ஆகியோரின் பேர்த்தியும், அருண், ஆரவி, யருஷ், சாய்ஷா, அஸ்வதிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2025) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முதலிகோவில் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(CS 30830) D*

தகவல்:
குடும்பத்தினர்.
077 716 4773

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# மீளுகைக்கான தருணமிது!

மிகப்பெரும் துயரில் வீழ்ந்து கிடக்கிறது இலங்கை. கொரோனா, பொருளாதார நெருக்கடி என அடுத்தடுத்து வாங்கிய பலமான அடிகளால் துவண்டிருந்த நாடு, இப்போதுதான் மெல்ல மெல்ல பழைய நிலைக்குத் திரும்பிக்கொண்டிருந்த நிலையில்- நம்பிக்கை துளிர்த்துக்கொண்டிருந்த காலத்தில்- எல்லாவற்றையும் ஓரிரு நாள்களில் புரட்டிப் போட்டிருக்கிறது டித்வா புயல். மனிதர்களின் உயிரிழப்பு, காயங்கள், மண்சரிவு, வெள்ளக்காடு, பாதை துண்டிப்பு, கால்நடைகள் இறப்பு, உடமையிழப்புகள், இடப்பெயர்வுகள், உதவி கேட்டுத் தவிக்கும் கோரிக்கைகள் என எங்கு பார்த்தாலும் துயரச் செய்திகளையே காற்று சுமந்து வருகின்றது. இந்த இழப்புகளில் இருந்து இலங்கை மீள்வதென்பது-அதுவும் இப்போதைய பொருளாதார நிலைமையில்- உடனடிச் சாத்திய மற்றதுதான். ஆனாலும் வெறுமனே இந்த இழப்புகளை எண்ணிக் கலங்கியபடி தேங்கியிருந்தோமானால் எதுவுமே ஆகப்போவதில்லை. இந்தநிலையில் மீண்டெழுவதற்கான எத்தனம் முழுவீச்சில் தேவை. இருக்கின்ற அத்தனை பலத்தையும் திட்டமிட்டு, ஒருங்கிணைத்துப் பிரயோகித்தால் இந்தத் துயரில் இருந்து மீண்டெழுதல் என்பது ஒரு விடயமே இல்லை.

அழிவில் இருந்து மீள்தல் என்பது எமக்கும் புதியதல்ல. இழப்புகளில் இருந்து மீண்ட அனுபவம் எம்மிடம் நிறையவே உண்டு. முப்பது வருடப் போரின் போது பலதடவை பேரழிவுகளில் சிக்குண்டு, இலட்சக்கணக்கான உயிர்களைக் காவு கொடுத்த பின்னும், சேர்த்து வைத்த அத்தனை சொத்துகளையும் இழந்த பின்னும் பீனிக்ஸ் பறவையாக நாம் மீளவும் நிமிர்ந்திருக்கிறோம். அது தமிழர்கள் என்ற தனியொரு இனத்துக்கான இழப்பும், மீளுகையும். ஆனால் இப்போது நிகழ்ந்திருப்பது ஒட்டுமொத்த இலங்கைக்குமான இழப்பு. இயற்கை இனமத பேதம் பார்க்காமல் எல்லோரையும் 'வைத்துச் செய்துவிட்டு' போயிருக்கிறது. எனவே இயற்கையின் சீற்றத்தால் சிதைந்த நாட்டை இனமத பேதமின்றி ஒன்றிணைவதன் மூலமே மீளக்கட்டியமைக்கமுடியும். இதற்கும் நம்மிடம் ஒரு படிப்பினை இருக்கின்றது.


2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி இலங்கையின் கரையோரப்பகுதிகளை ஆழிப்பேரலை விழுங்கிய போது, இதைவிடப் பெருந்துயரையும், உயிரிழப்புகளையும் சந்தித்தோம். ஆழிப்பேரலையும் இனமத பேதம் பார்க்கவில்லை. நாடெங்கும் சாக்குரல்கள். இலங்கையின் வரலாற்றிலேயே அதிக இழப்பை ஏற்படுத்திய இயற்கை அனர்த்தம் அது. 'இந்த அனர்த்தப் பாதிப்புகளில் இருந்து இனி எப்படி மீள்வோம்?' என்று எல்லோருமே நம்பிக்கையைக் கைவிட்டிருந்தனர். ஆனால் அப்போது தமிழ்மக்களின் காவலர்களாக இருந்த விடுதலைப்புலிகள், சாவிலிருந்தும், பேரழிவிலிருந்தும் விரைவாக மீண்டெழும் வழியைப் பற்றி தங்களின் மீட்புநடவடிக்கைகள் மூலம் பாடமெடுத்தார்கள். அதே வழியில் முழு இலங்கையையும் மீட்டெடுக்கவும் புலிகள் நேசக்கரம் நீட்டினர். அப்போதைய சந்திரிகா அரசாங்கமும் அந்த நேசக்கரத்தைப் பற்றிப் பிடித்து, புலிகளின் உதவியோடு ஆழிப்பேரலை அனர்த்தத்தில் இருந்து நாட்டை மீட்டெடுக்க 'ஆழிப்பேரலை அனர்த்த மீட்சிக்கான பொதுக் கட்டமைப்பு' ஒன்றுக்கு உடன்பட்டார். ஆனால் 'நாடு அழிந்தாலும் பரவாயில்லை, புலிகளோடு கைகோர்க்கக் கூடாது' என்று அந்தப் பொதுக்கட்டமைப்பை எதிர்த்து, அதை இல்லாமல் ஆக்கி, நாட்டின் மீட்சிக்கு தடைக்கல் போட்டவர்கள் வேறுயாருமல்லர், இப்போது தேசிய மக்கள் சக்தி எனும் பெயரில் ஆட்சி செய்யும் இதே ஜே.வி.பி.யினர்தான். வரலாறு கண்டிப்பான கிழவி என்பார்கள். அவள் வாங்கிய அடியைத் திருப்பிக் கொடுப்பதில் மகாகெட்டிக்காரி. அதனால் என்னவோ, புலிகளோடு சேர்ந்து நாட்டை பேரழிவில் இருந்து மீட்கக்கூடாது என்று வீம்பு காட்டியவர்களையே, 'இலங்கையராக ஒன்றிணைந்து நாட்டை மீட்க உதவி செய்யுங்கள்' என்று புலம்பெயரிகளிடம் கெஞ்சவைத்துவிட்டாள். இந்த இக்கட்டான நேரத்தில் நாமும் ஜே.வி.பி.யினரைப் போல மனிதமின்றி இருக்காமல், நாட்டை அழிவிலிருந்து மீட்டெடுக்க கரம் கொடுக்க வேண்டிய தருணமிது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை

பொறாமை மடமைக்கொப்பானது;
போலித்தனம் தற்கொலைக்கொப்பானது.

—எமெர்சன் —




இந்திய மீனவர்களின்

# 23 படகுகள் அரசுடமை பலருக்குப் பிடியாணை!



## ஊர்காவற்றுறை நீதிமன்றம் அதிரடி

**யாழ்ப்பாணம், டிசெ. 1**

**இந்திய மீனவர்களால், அத்துமீறிய மீன்பிடிக்குப் பயன்படுத்தப்பட்ட 23 படகுகள் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தால் அரசுடமை ஆக்கப்பட்டுள்ளன.**

அத்துமீறிய மீன்பிடிக்காக இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்ட போது, அவர்கள் பயணித்த படகுகள் இலங்கைக் கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்டிருந்தன. அவை தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் தனியாக நடைபெற்று வந்தது. இதன் தொடர்ச்சியாகவே, 23 இந்தியப் படகுகளை அரசுடமையாக்கி ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி நளினி சுபாகரன் உத்தரவிட்டுள்ளார்.

வழக்குகளுக்காக நீதிமன்றத்தில் முன்னிலையாகிய படகுகளின் உரிமையாளர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட கடூழியச் சிறைத்தண்டனையையும் அவர் விதித்துள்ளார். இதேவேளை, சில படகுகளின் உரிமையாளர்கள் இதுவரை நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. அவர்களுக்கு எதிராகப் பிடியாணை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-26)

## கர்ப்பிணிப் பெண்கள் விசேட கண்காணிப்பு

சாவகச்சேரி, டிசெ.1

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள கர்ப்பிணித் தாய்மாகளது. வீடுகள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களை அருகிலுள்ள பிரதேச மருத்துவமனைகளில் அனுமதிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே, அத்தகையவர்கள் தம்மைத் தொடர்புகொள்ளுமாறு பிரதேச செயலகத்தினர் அறிவுறுத்தியுள்ளனர். (ம41,9)

## குடிதண்ணீர் விநியோகத்துக்கு கிளிநொச்சியில் நெருக்கடி!

கிளிநொச்சி, டிசெ. 1

கிளிநொச்சி மாவட்டத்தில் குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்வதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையினர் அறிவித்துள்ளனர். இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

தற்போது ஏற்பட்ட காலநிலை அனர்த்தம் காரணமாக கிளிநொச்சிக் குளங்களில் தண்ணீர் மாசடைந்துள்ளது. எனவே, நீரைச் சுத்திகரித்து வழங்குவது சிரமமாகியுள்ளது. ஆதலால், பொதுமக்கள் தண்ணீரைச் சிக்கனமாகவும், கொதிக்க வைத்தும் அருந்துவது அவசியம். எனினும், இயலுமானவரை தண்ணீரைச் சுத்திகரித்து வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றுள்ளது. (ம-113)



இரணைமடுக் குளத்தின்

## வான்கதவுகள் மூடப்படுகின்றன

கிளிநொச்சி, டிசெ. 1

இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளதாலும், நீர்வரும் வீதம் தணிந்துள்ளதாலும் குளத்தின் கீழ்ப்பகுதியிலுள்ள வயல் நிலங்களைப் பாதுகாக்கும் நோக்கில், வான்கதவுகளைப் படிப்படியாக மூடுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் வடக்கு மாகாண நீர்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள 54 நீர்ப்பாசனத்திட்டங்களில், ஞாயிற்றுக்கிழமை காலை மேற்கொள்ளப்பட்ட அவதானிப்பின் படி 51 குளங்கள் வான் பாயும்நிலையில் உள்ளன. சனிக்கிழமை நண்பகல் 40 அடியாகக் காணப்பட்ட இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம், ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் 37 அடியாகக் குறைவடைந்துள்ளது. குளத்துக்கான நீர் உள்வரும் வீதம் மணித்தியாலத்துக்கு 2.173 மில்லியன் கன மீற்றராகக் குறைவடைந்துள்ளதுடன், வெளிச்செல்லும் வீதம் 2.876 மில்லியன் கன மீற்றராகக் காணப்படுகின்றது. நீரேந்து பரப்பில் பெய்த மழையால் இன்னும் அண்ணளவாக 27 மில்லியன் கன மீற்றர் நீர் குளத்துக்கு வரலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது. எனினும் குளத்தின் கீழ்ப்பகுதியிலுள்ள வயல் நிலங்களைப் பாதுகாக்கும் நோக்கில், வான்கதவுகளைப் படிப்படியாக மூடுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன -என்றார். (ம-113)

நாளை
செவ்வாய்க்கிழமை - கார்த்திகை 7
02.12.2025
சுபநேரம் : 10.45 - 12.15
ராகுகாலம் : 03.15 - 04.45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரநாயக்கவில் 120 பேர் மாயம்

அரநாயக்க - அம்பலாங்கந்தையில் ஏற்பட்ட மண்சரிவில் 120 பேர் காணாமற்போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. அவர்களில் 20 குழந்தைகளும் அடங்குகின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. மண்சரிவு காரணமாகச் சிக்கியுள்ளவர்களை மீட்பதில் சிரமம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ச-இ)

## சுற்றுலாவிகள் தொடர்புகொள்ள 1912

கொழும்பு, டிசெ. 1

இலங்கையில் தற்போது நில்வும் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கு உதவுவதற்காக அவசர தொலைபேசி இலக்கத்தை இலங்கை சுற்றுலாத் துறை அறிவித்துள்ளது. இலங்கைச் சுற்றுலா அவசர மற்றும் உதவி மையத்தின் 24 மணி நேர சேவையான 1912 என்ற இலக்கத்தின் மூலம் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-இ)





**துனுக்காய் பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், துனுக்காய்.**

**கிளைப் பொதுச் சபைக் கூட்ட அறிவித்தல்**

மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைப் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 06.12.2025 சனிக்கிழமை மு.ப.10.00மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத்தின் கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்க தகைமையுடைய உறுப்பினர்களிற்கு அதிகாரமளிக்கப்பட்ட தவிசாளர்களினால் கூட்ட அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிளைக்குழு தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவித்தல்கள் சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களிலும் பார்வையிடலாம். இதன் பிரகாரம் தகைமையுடைய கிளைப் பொதுச் சபை உறுப்பினர்கள் கூட்டங்களிற்கு தவறாது சமூகமளிக்குமாறும். அழைப்புக் கடிதம் கிடைக்கப்பெறாவிடினும் தங்களுக்கு உரித்தான கிளைப் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு சமூகமளித்து கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

தலைவர் | செயலாளர்



## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 04 . 1949



மறைவு 29 . 11 . 2025

**தேவராசா பிரமிளா**

இலக்கம் 9, தேவஸ்தன் உடுவில் வீதி, மானிப்பாயை பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி தேவராசா பிரமிளா அவர்கள் கடந்த (29.11.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேவராசா - தேவமணி தம்பதியினரின் ஏகபுத்திரி ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2025) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் இல.19 திருப்பதி, மெமோறியள் வீதி எனும் முகவரியில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 60035) E

**இல.19, திருப்பதி**
**மெமோறியள் வீதி,**
**மானிப்பாய்**

**தகவல்:**
**மருமகன் - ப.சிவகுமார்**



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு

தோற்றம் 24 . 04 . 1940



மறைவு 11 . 12 . 2024

கடந்த (11.12.2024) அன்று இறைவனடி சேர்ந்த
எங்கள் அன்பு அம்மா

**அமரர் மகாலட்சுமி கணபதிப்பிள்ளை**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி பிரார்த்தனை இன்று (01.12.2025) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் வண்ணை காமாட்சி அம்பாள் திருமண மண்டபத்தில் (நாச்சிமார் கோவில்) நடைபெறவுள்ளது. இவ் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து சிறப்பித்து தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**


**13, அரசடி ஒழுங்கை,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.** (CS/60023) J-1

**குடும்பத்தினர்**
**மகன் - கிருபா - 076 985 4453**



## 32ம் ஆண்டில் நினைவலைகள்

தாயின் மடியில் 26 . 09 . 1929



ஆண்டவன் அடியில் 27 . 11 . 1993

**சின்னத்தம்பி சந்திரசேகரம்**

**(ஓய்வுபெற்ற P.W.D ஓவசியர் R.M.C - RDA)**

திதி : பூர்வபக்க ஏகாதசி

ஊரெழுவில் உதித்தே உன்னதமாய் வாழ்ந்தீரே
இணுவிலிலே இணைதேடி இன்பமாய் வாழ்ந்தீரே
தென்புலத்தார், தெய்வம், விருந்தொக்கல் தான் என்ற
வள்ளுவர் வாக்கினிலே வாழ்ந்தீரே
வையகம் உள்ளவரை வாழும் உம் நாமமே

(CS 60037) E

**இன்பகம்**
**இணுவில் மேற்கு,**
**இணுவில்**

**குடும்பத்தினர்**



## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 07 . 1940



மறைவு 29 . 11 . 2025

**கண்ணம்மா தர்மலிங்கம்**

**(வெள்ளைக் கண்ணம்மா)**

புங்குடுதீவு 7ம் வட்டாரம் ஊரதீவைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கண்ணம்மா தர்மலிங்கம் அவர்கள் 29.11.2025 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - யோகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் கனகரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நிறஞ்சன் (லண்டன்) மற்றும் மதனா (கனடா), மஞ்சுளா (ஜேர்மனி) அவர்களின் அன்புத் தாயாரும், சந்திரலதா (லண்டன்), பிரபாகரன் (கனடா), நகுலேஸ்வரன் (நகுலன் - ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிதர்சன் (லண்டன்), கோகில் (கனடா), கோபனா (கனடா), மிதுஷன் (ஜேர்மனி), பானுசன் (ஜேர்மனி), ஆருசன் (ஜேர்மனி), வினோஷன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2025) திங்கட்கிழமை கைதடி கிழக்கு, கைதடியில் உள்ள அவரது மருமகன் பா.பாலகுகனின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 60036) E

**தகவல்: குடும்பத்தினர்**
**077 109 5344, 077 672 4283**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறான தகவல்கள் பகிர்வதைத் தவிருங்கள்

கொழும்பு, டிசெ.1

தற்போதைய சீரற்ற வானிலை தொடர்பாக தேவையற்ற பீதியை ஏற்படுத்தும் தவறான தகவல்கள் பகிர்வதை தவிர்க்குமாறு டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.

தவறான மற்றும் போலியான தகவல்களை வெளியிடும் போலி சமூக ஊடகப் பதிவுகள் மற்றும் செய்திகளை அடையாளங் கண்டு, அவற்றை அகற்றுவதற்கு அரசாங்கம் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களு டன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. சமூக ஊடகத் தளங்களில் பரவும் சரிபார்க்கப்படாத, புதிய விடயங்களை நம்பவேண்டாம். பதிலாக துல்லியமான மற்றும் சரியான நேரத்தில் தகவல்களை வழங்கும் அரச மற்றும் பிற அதிகாரபூர்வ ஊடகங்களைப் பின்பற்றுமாறும் பொதுமக்களை அவர் வலியுறுத்தியுள்ளார். (ச-இ)

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்**
**பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குநர்கள் மற்றும் நிர்மாணதாரர்களை பதிவு செய்தல் - 2026**

மேற்படி அறிவித்தல் தொடர்பாக 06.11.2025 ஆம் திகதிப் பத்திரிகையில் எம்மால் விளம்பரப்படுத்தப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் "விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதி 25.11.2025" என அறிவிக்கப்பட்டது. இவ் இறுதித் திகதியை 10.12.2025 வரை நீடித்துள்ளோம். என்பதையும் இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் இக்காலப்பகுதிக்குள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.


மதியாபரணம் அம்பிகைபாகன்
கௌரவ செயலாளர்
அறங்காவலர்சபை
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி
அம்மன் கோவில்

தொலைபேசி இலக்கம்
021 432 3440

(CR 46605) E

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு
23 . 02 . 1963



இறப்பு
01 . 12 . 2024

**அமரர் செபஸ்தியாம்பிள்ளை ஜெயந்திரன்**

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" யோவான் 11:25

எமது தந்தையின் ஆன்ம இளைப்பாற்றி திருப்பலி 01.12.2025 திங்கட்கிழமை காலை 05.45 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும். திருப்பலியில் பங்கு கொண்டு இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கவும், அதனைத் தொடர்ந்து இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பூநாறி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

குடும்பத்தினர்
077 707 0891
070 398 5096

(CS 60038) E

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
05 . 06 . 1947



மறைவு
28 . 11 . 2025

**சபாரட்ணம் இராஜதுரை (Accountant)**

(உரிமையாளர் - S.Rajathurai & Co கணக்காய்வு நிறுவனம்)

(S.V.முருகேசு நிறுவன 28 வருட கணக்காய்வாளராக கடைமையாற்றிய பெருமதிப்பிற்குரியவர்.)

அவர்கள் (28.11.2025) வெள்ளிக்கிழமை காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரமடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**உரிமையாளர்களும் ஊழியர்களும்**

S.V.M (Pvt) Ltd
122 Dam St,
Colombo 12

S.V.என்ரபிரைஸ்
கரடிபோக்கு சந்தி,
கிளிநொச்சி.

S.V.முருகேசு
154 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(CS 46606) E

## மரண அறிவித்தல்

தோற்றம்
29 . 10 . 1940



மறைவு
27 . 11 . 2025

**கெலன் சேவியர்**

யாழ் றக்கா வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கெலன் சேவியர் அவர்கள் 27.11.2025 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெனடிக்ற் - சிசிலியா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சொலமன் - அன்னம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சொலமன் சேவியர் அவர்களின் அன்பு மனைவியும், யூட் றொஷான் (லண்டன்), ஆன் ஆகியோரின் அன்புத் தாயாரும், நளிக்கா (லண்டன்), யசீந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், றொஷில், சிறோன், சிகான், எலிசா, ஜெறிஷ், ஜெவ்றிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். மேலும் காலஞ்சென்றவர்களான லூர்த்து, வின்சன்ற், டனிசியஸ், இம்மானுவேல், கிறிஸ்ரிதாசன், றூபா மற்றும் ராஜேஸ்வரி, அல்வின் (பிரான்ஸ்), யசிந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிசிலியம்மா, லூர்துமலர், இருதயராசா மற்றும் சிறப்பின்னம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்கான திருப்பலி யாழ் றக்கா வீதியில் அமைந்துள்ள புனித திரேசாள் ஆலயத்தில் 01.12.2025 திங்கட்கிழமை மாலை 03.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக யா/புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
077 055 1268, 071 242 4292,
021 222 3618

21, றக்கா வீதி
யாழ்ப்பாணம்

(CS 60039) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் . 1920



மறைவு 01 . 12 . 1995

## அமரர் சின்னத்தம்பி நாகேந்திரம்

**திதி: 30.11.2025**

மீளாத் துயரினில் மூழ்கிடும் போதும்
வீழாமல் தேற்றிடும்
என்னுயிர் தெய்வம்
தந்தையாய் அல்ல
தேவனாய் வாழ்ந்தீர்
தோளில் சுமந்து
துயரறச் செய்தீர்
தூக்கத்தை தொலைத்து
துக்கத்தைக் களைந்தீர்
பாரினிலே பல இடர்களில் எமைக் காத்தீர்
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்த பின்
பாதுகாப்பின்றி தவிக்கின்றோம்.
எமக்காய் என்றும் எம்முள் இருந்து எமைக் காப்பீர்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சுன்னாகம். குடும்பத்தினர்.

(CS 60043) A

# மரண அறிவித்தல்

மண்ணில் 04 . 11 . 1948



விண்ணில் 30 . 11 . 2025

## கலாபூஷணம் கலைச்சிகரம், கலைஞானச்சுடர் சிவநாமம் சிவதாசன் (சமாதான நீதவான்)

அரியாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற விற்பனைத் திணைக்கள முகாமையாளரும் பிரபல எழுத்தாளருமாகிய கலாபூஷணம், கலைக்குருசில், கலைச்சிகரம், கலைஞானச்சுடர் சிவநாமம் சிவதாசன் அவர்கள் நேற்று (30.11.2025) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவநாமம் - நவமணி (பவளம்) தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான அரியாலையூர் கவிஞர் வே.ஐயாத்துரை- மகாலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயபாரதியின் அன்புக் கணவரும், சிவகுமார் (யாழ்.போதனா வைத்தியசாலை), சத்தியகுமார் (துபாற் திணைக்களம், யாழ்ப்பாணம்), சுபாஜினி (ஆசிரியை றில்லியம் முன்பள்ளி), திருக்குமார் (தொல்பொருட் திணைக்களம், யாழ்ப்பாணம்), வராகினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், செந்தில்நேசன் (ஆசிரிய வளவாளர் யாழ். கல்வி வலயம்), தயாளினி, பபிதா, பிறேமிளா, நித்தியதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கலாபூஷணம் சிவநேசன், காலஞ்சென்றவர்களான ஜெயராசா, ஜெயச்சந்திராதேவி, பவானி மற்றும் சத்தியகுமாரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான வரதராஜா, ஜீவதாசன் மற்றும் அபிராமி மகேந்திரராஜா, வாணிதாசன் (ஜேர்மனி), முருகதாசன், குமரதாசன் (ஆசிரியர்), காலஞ்சென்ற குகதாசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சிவகாடாட்சம்-கதிரமலை, கலாபூஷணம் V.K.இரத்தினம்-செல்வமணி ஆகியோரின் பெறா மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - தங்கம்மா, நாகமணி மற்றும் சிவபாக்கியம் (கனடா), காலஞ்சென்ற சிவபஞ்சாட்சரம் மற்றும் மதுரவேணி ஆகியோரின் மருமகனும், பரத்கிருஷ்ணா, பிரமிக்கா, கலைநயன், கனீஷியன், கஜானன், தனஞ்செயன், அனிருத், யாதவ் கிருஷ்ணா, தக்ஷயன், அர்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2025) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் இல.45, நொத்தாரிஸ் வீதியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் இடம்பெற்று, நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
க.செந்தில்நேசன் (மருமகன்) 0777 420816
ம.அச்சுதன் (பெறாமகன்) 077 248 7077

(CS 30826) A

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 12 . 1945



மறைவு 29 . 11 . 2025

## பொன்னுத்துரை கமலாவதி

அரசடி வீதி, 5ஆம் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை கமலாவதி அவர்கள் 29.11.2025 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலு - சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகுந்த அன்பு மூத்த புதல்வியும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் பாசமிகுந்த மனைவியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் பாசமிகுந்த மருமகளும், தயா, ரஜி ஆகியோரின் பாசமிகுந்த தாயாரும், கிருபா, இராஜசேகரம் ஆகியோரின் அன்பு மாமியாரும், ரனு, விஷ்ணு ஆகியோரின் பாசமிகுந்த பேர்த்தியாரும், காலஞ்சென்றவர்களான அழகு, சந்திரா, மகேந்திரம் மற்றும் தருமு, நீலா, இராசேந்திரம் (இந்தியா), குலசிங்கம் (டென்மார்க்), நிர்மலா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.12.2025 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பைமடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அரசடி வீதி
5 ஆம் ஒழுங்கை

தகவல்:
குடும்பத்தினர்

(CS 60040) E

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 01 . 1940



மறைவு 29 . 11 . 2025

## ஆறுமுகம் சிவஞானம்

காரைநகர், புதுறோட்டை பிறப்பிடமாகவும், களபூமி, கொம்பாவோடையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவஞானம் அவர்கள் (29.11.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், ஆறுமுகம் (கண்ணாடி) அவர்களின் அன்பு மனைவியும், சிவகுமாரன் (பசறை), சந்திரமதி (வவுனியா), சிவனேஸ்வரி, சிவமலர் (பிரான்ஸ்), ஞானகரன் (லண்டன்), காலஞ்சென்ற சியாமளாவின் அன்புத் தாயாரும், சந்திரமதி (பசறை), காலஞ்சென்றவர்களான செந்தில்நாதன் (வவுனியா), தனபாலகுமாரன் மற்றும் அரிகரராசா (பிரான்ஸ்), பத்மலோஜினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அஜந்தா, கோதரன், சகிலன், மயூரன், கபிலன், கீரன், நயனி, ராம், துஷந்தா, அக்ஷரன், சுபன், கீர்த்தனா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், தன்விக், ஆத்விக், ரயன் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2025) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 07.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கொம்பாவோடை
களபூமி
காரைநகர்

தகவல்: கணவர், பிள்ளைகள்
077 999 4610

(CS 60041) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைத்து...

அனைத்தும் இன்று முதல் வழமை போன்று இயங்கும் என்று பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது. இடரால் பாதிக்கப்படாத அரச நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்கள் வழமைபோன்று இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## மீன்பிடிக்க...

முன்தினம் மீன்பிடிக்காகச் சென்று காணாமல் போயிருந்தவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
பொன்னாலையைச் சேர்ந்த நாகன் கிருஷ்ணமூர்த்தி (வயது-63) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.
சில தினங்களுக்கு முன்னர் சீரற்ற கால நிலை காரணமாக மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிலும், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிலும் உயிரிழப்புக்கள் பதிவாகியிருந்தன. பொன்னாலையில் ஏற்பட்ட உயிரிழப்புடன் சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக உயர்ந்துள்ளது. (அ-எ-26-27)


## வேலையாட்கள் தேவை

கொழும்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள், தேவை.

- முகாமையாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துனர்
- காசாளர்

(உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும், கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்)

தொடர்பு: 077 386 6250

(CS 60046) D


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 16 . 09 . 1938



மறைவு 27 . 11 . 2025

(CS 60042) D

### அமரர் கந்தையா இராஜசிங்கம் (K.R)

எமது சித்தப்பா அவர்கள் கனடாவில் காலமான செய்தியை கேள்வியுற்று துயரடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

406, K.K.S வீதி
யாழ்ப்பாணம்.

காராளசிங்கம்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம்:16.08.1961 மறைவு:26.11.2025

### வரதராசா சித்திராதேவி


நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் தற்போது உடுவிலை வதிவிடமாகவும் கொண்டிருந்த வரதராசா சித்திராதேவி அவர்கள் கடந்த (26.11.2025) புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.
அன்னாரின் பூதவுடல் இலக்கம் 148, பிரதான வீதி, யாழ்ப்பாணம், E.Sons மலர்சாலை மண்டபத்தில் இன்று (01.12.2025) திங்கட்கிழமை காலை 8.00 மணிமுதல் 10.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் செய்யப்பட்டு கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, பி.ப 12.30 மணியளவில் அடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
வ. அஜந்தன் (மகன்)

(CS 60044) A

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 01 . 1946



மறைவு 28 . 11 . 2025

### திருமதி சுநீதை சிவானந்தன்


யாழ்ப்பாணம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுநீதை சிவானந்தன் அவர்கள் கடந்த (28.11.2025) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை சிவானந்தன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வைத்திய கலாநிதி திரு. திருமதி சுப்ரமணியம் விசாலாட்சி தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், கொல்லங்கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இளையதம்பி சங்கரப்பிள்ளை (கிளாக்கர்) - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், கோகுலகாந்தின் பாசமிகு தாயாரும், பிரதீபாவின் பாசமிகு மாமியாரும், விமலா, பாலகி, சயாபாதி மற்றும் காலஞ்சென்ற ரகுபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சர்வானந்தன் மற்றும் காலஞ்சென்றவர்களான விவேகானந்தன், அருளானந்தன், காசிநாதன், ஈஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், சின்மயன், தன்மயி, ஹிரன்மயி ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2025) செவ்வாய்க் கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

116/A, K.K.S. வீதி,
மல்லாகம்.

தகவல்
சி. கோகுலநாத் (மகன்)
0212242224 / 0777240572

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 10 . 1954



மறைவு 30 . 11 . 2025

### திரு. கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்

துன்னாலை வடக்கு தாமரைக்குளத்தை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திரு. கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் அவர்கள் நேற்று (30.11.2025) ஞாயிற்றுக்கிழமை இறையடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்) - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், Dr. தணிகாசலம் (அவுஸ்திரேலியா), குணமணி (கொழும்பு), காலஞ்சென்ற சின்னையா (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், சீமேந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), காலஞ்சென்ற Dr. இரத்தினகோபால்(அவுஸ்திரேலியா), மற்றும் கணேசலிங்கம் (ஜெர்மனி), சரோஜினிதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெகதீஸ்வரி (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற சட்டத்தரணி அருமைநாயகம், காலஞ்சென்ற ஜெயராணி மற்றும் Dr. சுபாஷினி (அவுஸ்திரேலியா), நகுலேஸ்வரி (ஜெர்மனி), Eng. கனகலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2025) திங்கட்கிழமை காலை 8:00 மணி முதல் 9:30 மணி வரை மந்திகை மருத்துவமனை முன் உள்ள மலர்ச்சாலையில் நடைபெற்று 9:30 மணி முதல் 10:30 மணி வரை அன்னாரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 10:30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேரோண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குணமணி (அக்கா) +94 112 507 852
[illegible] (மருமகள்) +44 7392 110654
கார்த்திக் (பேரன்) +61 418 917 950
[illegible] (பேரன்) 077 677 9274

தகவல்:
குடும்பத்தினர்

(CS 30829) D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23.06.1967 | 27.11.2025 |



### ஸ்ரீகாந்தன் ஸ்ரீகுகன்

(கணிதபாட ஆசிரிய ஆலோசகர், கிளி/வடக்கு வலயம்)

குப்பிளானை பிறப்பிடமாகவும், புத்தளத்தை தற்காலிக முகவரியாகவும், முல்லையடி, பளையை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீகாந்தன் ஸ்ரீகுகன் கடந்த (27.11.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஸ்ரீகாந்தன் - கருணாநிதி தம்பதியினரின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்ற குணபாலசிங்கம் - தங்கேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், குணேஸ்வரி (ஆசிரியை, கிளி/இயக்கச்சி மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், ஸ்ரீலனுக்ஷன், ஸ்ரீடிஷோபன், அட்சயா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீசுமதி (USA), ஸ்ரீ ரஜனி, ஸ்ரீதரன், ஸ்ரீகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பாஸ்கரன், பிறேம்குமார், துசியா, நம்மியா, பிறேமபாலன், மனோபாலன் ஆகியோரின் மைத்துனரும், ஸ்ரீபுஸ்பதேவி, சுகந்தி ஆகியோரின் சகலனும், ஜினோ, ஜிபோ, துசாந்த், மேனுசா, கபில், ஹரி, ராகவி, ருக்சாஜினி ஆகியோரின் மாமனாரும், துகிலன், லேயா, திலான், மிலா, சானுயன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2025) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக மலாயன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
076 618 0213

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 03.05.1944 | 27.11.2025 |



### கனகரத்தினம் வரதலட்சுமி

மூளாயை பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் வரதலட்சுமி கடந்த 27.11.2025 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான வள்ளிக்கொடி, கனகராசா, பொன்னுத்துரை ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசதுரை, பூமலர் மற்றும் கமலாதேவி ஆகியோரின் மைத்துனியும், இராஜேஸ்வரி, சற்குணராசா, தவராசா, சிவசக்தி, புவனேஸ்வரி, காலஞ்சென்றவரான புவனேந்திரன், ஜெகதீஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், தெய்வராசா, புஸ்பராணி, ராதா ஜெயலட்சுமி, திலகேஸ்வரி, குலசிங்கம், இராஜநாயகி, சுகுந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரதீஸ், பிரதீப், பிரதீகா, பிரதீபா, பிரதீனா, கஜேந்தினி, கஸ்தூரி, சரணியா, திலக்சன், சுகிர்தன், சுதர்சினி, சுதர்சனா, மயூரதி, காயத்திரி, பிரவீன், அபிஷா, திலக்சன், பிரவீணன், ஆதீஸ், ஆர்த்திக், அஸ்மித் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நதுர்சனன், வர்சியா, சரூண், கிரியன், பூர்சிகா, அதியன், தன்சிகா, தன்யஸ்ரீ, கிசான்ராஜ், கவிசன், ரித்தீஸ், ஆராதயா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2025) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் Senne Friedhof, Brackweder Str 80, 33647 Bielefeld எனும் இடத்தில் முற்பகல் 10 - 12 மணியளவில் நடைபெற்று, பின்பு தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்

இராஜேஸ்வரி (மகள்) - 076 7688 187
சற்குணராசா (மகன்) - 076 6550 242
சுகுந்தன் (மருமகன்) - +4917672329772 (ஜேர்மனி)

# மரண அறிவித்தல்



## பேரம்பலம் பாலசுப்பிரமணியம்

(ஓய்வு நிலை ஆசிரியர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29.03.1934 | 29.11.2025 |

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று முன்தினம் (29.11.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சித்தவைத்தியர் பேரம்பலம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தையலம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மாசினி அவர்களின் அன்புக் கணவரும், கலாநிதி அபிராமி (சிரேஷ்ட விரிவுரையாளர் விலங்கியல் துறை, யாழ் பல்கலைக்கழகம்), யதுகுலன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), அபர்ணா (ENT சத்திர சிகிச்சை நிபுணர், மாவட்ட பொது வைத்தியசாலை, மன்னார்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவரூபன் (பிரதிப் பிரதம செயலாளர் - நிதி, வடக்கு மாகாணம்), சுகந்தினி (சிங்கப்பூர்), பகீரதன் (ஆசிரியர், வவுனியா/ முஸ்லிம் மகா வித்தியாலயம்), ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆதித்யன், அனந்திதா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பேராசிரியர் கனகசபாபதி, சிவலிங்கம், வாமதேவன், பத்மநாதன், புனிதவதி, ராஜராஜேஸ்வரி, மாலினி மற்றும் மகாதேவன், சாரதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மற்றும் தனபூஷணி, காலஞ்சென்ற சாரதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (01.12.2025) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிராமண உயரப்புல இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 92, "ஸ்ரீபத்மம்"
பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீட்புப்...

ஐவர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், விமானி உயிரிழந்துள்ளார்.

விமானப் படைக்குச் சொந்தமான பெல் 212 ரக ஹெலிகொப்டரே ஆற்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. லுணுவிலவுக்கும் வென்னப்புவவுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் இந்த ஹெலிக்கொப்டர்விபத்துக்குள்ளாகியது. ஹெலிகொப்டரில் இருந்த விமானப் படையைச் சேர்ந்த இருவரும், மீட்புப் பணியாளர்களும் மீட்கப்பட்டு மாரவில்ல ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். ஹெலிகொப்டரின் விமானி விங் கமாண்டர் நிர்மல் சியம்பலாபிட்டிய உயிரிழந்தார்.

விபத்தில் ஹெலிகொப்டருக்கு ஏற்பட்ட சேதவிவரங்கள் தொடர்பில் அறியமுடியவில்லை. (அ-எ-இ)

## மீள்...

தல்களை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வழங்கியுள்ளார். இந்த அலுவலகம் அத்தியாவசிய சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் இயங்கவுள்ளது.

இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீளமைக்கத் தேவையான நடவடிக்கைகளுக்காக இந்த அலுவலகம் அமைக்கப்படவுள்ளது.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,வீடமைப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சு மற்றும் அவற்றின் கீழ் இயங்கும் நிறுவனங்களான தொடருந்து திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை , மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் என்பவற்றையும், முப்படை களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் குழு இந்த மத்திய நிலையத்தில் கடமைகளுக்காக நியமிக்கப்பட உள்ளனர்.

அந்த நிறுவனங்களின் அனைத்து விடயங்களுக்கும் ஒருங்கிணைத்து வசதிகளை வழங்கும் ஒரு கூட்டு செயல்பாட்டு மையமாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகத்தின் செயற்பாடுகளைச் முன்னெடுக்க வேண்டிய அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். இடர் நிலைமை தணிந்தவுடன் மக்களின் வாழ்க்கையை இயல்புநிலைக்குக் கொண்டுவர எடுக்க வேண்டிய அவசர நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்காக நேற்றுக் காலை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

## மழை...

தாலும் மலையகத்தின் பல இடங்களிலும் தொடர்ந்தும் மண் சரிவுகள் பதிவாகி வருகின்றன. மண் சரிவுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இடங்களில் ஏற்பட்ட மண் சரிவுகளில் சிக்கியவர்களை மீட்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், பல இடங்களில் வீதிகள் தாழிறங்கியுள்ளதால் மீட்பு நடவடிக்கை தாமதமாகி வருகின்றது என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, கண்டி, பேராதனை மற்றும் கன்னொருவை ஆகிய பகுதிகளில் மகாவலி ஆற்றின் நீர்மட்டம் குறைந்து வரும் நிலையில், ஆற்றின் இரு கரையோரங்களிலும் உள்ள பல கட்டடங்கள் மண்சரிவு அபாயத்தில் உள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது. அந்த வீடுகள் மற்றும் கட்டடங்களில் வசிப்போர் உடனடியாக வெளியேற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ-எ-இ)

## யாழ்., கிளி,...

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 11 ஆயிரத்து 878 குடும்பங்களைச் சேர்ந்த 38 ஆயிரத்து 005 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

தென்மராட்சி, நெடுந்தீவு, வேலணை, சண்டிலிப்பாய், சங்கானை, யாழ்ப்பாணம், காரைநகர், நல்லூர், கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை , மருதங்கேணி, ஊர்காவற்துறை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் ஆயிரத்து 554 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 916 பேர் 53 பாதுகாப்பு நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுனர் என்றும், 7 ஆயிரத்து 438 குடும்பங்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 341 பேர் நண்பர்கள் மற்றும் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, சீரற்ற காலநிலை காரணமாக 2 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளதுடன் 262 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

அதேவேளை, இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று மாலை 6 மணிக்கு வெளியிட்ட தரவுகளின்படி கிளிநொச்சி மாவட்டத்தில் 4 ஆயிரத்து 781 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 49 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். 26 இடைத் தங்கல் முகாம்களில் ஆயிரத்து 196 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 410 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 5 ஆயிரத்து 809 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 97 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். 48 இடைத்தங்கல் முகாம்களில் 2 ஆயிரத்து 40 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 46 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். வவுனியா மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் இரு உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதுடன், இருவர் காணாமல் போயுள்ளனர். (அ-எ-26-66)

## மன்னார்...

மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றுமாலை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

11 ஆயிரத்து 230 குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரத்து 505 பேர் 87 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மன்னார் மாவட்டத்தை ஏனைய மாவட்டங்களுடன் இணைக்கும் இரு வீதிகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் உள்ள அதிகளவான குளங்கள் பெருக்கெடுத்துள்ளதாலும், மல்வத்து ஓயா, பாலியாறு, பறங்கியாறு போன்ற ஆறுகளில் அதிக அளவில் நீர் பெருக்கெடுத்துள்ளதாலும் பல கிராமங்கள் மூழ்கியுள்ளன. அங்குள்ளவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியாதுள்ளது.

தனித்து விடப்பட்ட சுமார் 250 நபர்களை மீட்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தேக்கம், தொங்குபாலம் பகுதியில் கடந்த இரு தினங்களாகச் சிக்கியிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் ஹெலிகொப்டர் உதவியுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

கூராய் பகுதியில் உள்ள குளம் பெருக்கெடுத்ததால் மரங்களிலும் உயர்ந்த கட்டடங்களிலும் தஞ்சமடைந்த 40 பேர், நீர் மட்டம் குறைந்த நிலையில்அந்தப் பகுதியில் உள்ள மண் திட்டியில் தற்போது தஞ்சமடைந்துள்ளனர். சீரற்ற காலநிலை காரணமாக அவர்களை மீட்கும் நடவடிக்கை தாமதமாகி வருகின்றது. அவர்களுக்கான உணவு வழங்கும் நடவடிக்கைகள் கடற்படையூடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஏனைய பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கான உணவு மற்றும் மீட்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார். (அ-எ-56)

## இயற்கைப்...

களின் எண்ணிக்கை 10 இலட்சத்தை எண்டியுள்ளதுடன், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 300 ஐத் தாண்டியுள்ளது. நேற்று மாலை வரையான தரவுகளின் அடிப்படையில் 334 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், 370 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் மண்சரிவு இடர்களால் 2 இலட்சத்து 73 ஆயிரத்து 606 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 9 லட்சத்து 98 ஆயிரத்து 918 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்காக நாடு முழுவதும் ஆயிரத்து 275 பாதுகாப்பு மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 51 ஆயிரத்து 228 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 80 ஆயிரத்து 499 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள் மற்றும் மீட்பு நடவடிக்கைகள்தொடர்ந்தும்முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

## உணவு...

பாக அனைத்துப் பிரதேச செயலர்களுக்கும் யாழ்ப்பாண மாவட்டச் செயலரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்கள் எடுக்கப்பட்ட, எடுக்கப்படும் நடவடிக்கைகள்தொடர்பான முன்னேற்றங்களை ஆராய்வதற்காக நேற்று யாழ்ப்பாண மாவட்டச்செயலர், இணைய வழி ஊடாக பிரதேச செயலர்களுடன் கலந்துரையாடியபோதே இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு மூன்று நாள்களுக்குச் சமைத்த உணவு பிரதேச செயலாளர் ஒழுங்கமைப்பில் வழங்க முடியும். மேலதிக நாள்களுக்கு வழங்க வேண்டியிருப்பின் மாவட்டச் செயலரின் அனுமதி பெற்று மேலும் நான்கு நாள்களுக்கு வழங்க முடியும்.

ஏழு நாள்களுக்கு அல்லது அதற்கு அதிகமான காலத்துக்கு வழங்க வேண்டிய தேவை ஏற்படின் அமைச்சின் செயலாளர் அனுமதி பெற்று வழங்க முடியும்.

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுப் பாதுகாப்பு நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்காமல் அவர்களுடைய வீடுகள் அல்லது நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியிருப்பவர்களுக்குப் பாதிக்கப்பட்டவர்கள் என்ற அறிக்கையிடலுடன் அவர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் அல்லது சமைத்த உணவு வழங்கலாம். அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் பொருள்கள் பிரதேச செயலாளர்கள் மூலமே பதிவு செய்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவேண்டும்.

மாவட்டச் செயலகப் பதவிநிலை உத்தியோகத்தர்கள் பிரதேச செயலக ரீதியாக மேலதிக ஒருங்கிணைப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் துரித நடவடிக்கைகளுக்கு உறுதுணையாகவிருந்து மாவட்டச் செயலரின் கவனத்துக்கு உடனுக்குடன் தகவல்களை வழங்குவார்கள். சமைத்த உணவு மற்றும் உலர் உணவுப் பொருள்கள் வழங்கலுக்காகத் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தால் 60 மில்லியன் ரூபா நிதி தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பிரதேச செயலகங்களுக்கு அவசர தேவைக்கு ஏற்ப வழங்கப்பட்ட தறப்பாள், நுளம்பு வலைகள், மடிக்கும் கட்டில்கள் வழங்கப்பட்டமைக்கு மேலதிகமான தேவைப்பாடுகளை வழங்குவதற்கான கோரிக்கைகள் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவை கிடைத்ததும் பிரதேச செயலகங்களின் தேவைக்கு ஏற்ப மேலும் பங்கிட்டு வழங்கப்படும் என்றும் மாவட்டச் செயலர் ம.பிரதீபன் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-66)

## உடைப்பெடுத்தது...

வெள்ளத்தில் சிக்கியிருந்த 231 பேர் இலங்கை விமானப்படையினரால் நேற்றுமாலைவரை மீட்கப்பட்டிருந்தனர். இந்த மீட்புப் பணிகளுக்காக விமானப்படையின் பெல் - 412 ஹெலிகொப்டர் மற்றும் எம்.ஐ - 17 ஹெலிகொப்டர் ஆகியன பயன்படுத்தப்பட்டன. அந்தப் பகுதியில் தொடர்ந்தும் மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வெள்ளப் பாதிப்புக்குள்ளாகக்கூடிய இடங்களில் உள்ள மக்களை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கங்கை பாலத்துக்கு அருகில் உள்ள முறிஞ்சாறு உடைப்பெடுத்தால் உப்பாறு பாலம் வழியாக மூதூர் நோக்கிப் பயணிப்பது தடைப்பட்டுள்ளது. வெருகல் ஊடான போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. ஈச்சிலம்பற்று மருத்துவமனை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. கங்குவேலி பாடசாலை மற்றும் முத்து விநாயகர் சம்மேளனக் கட்டடம் என்பன முழுமையாக நீரில் மூழ்கியுள்ளன.

மூதூர் - இறால்குழி, நாவலடி பிரதேச மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றும் நடவடிக்கைகளை இராணுவத்தினர் முன்னெடுத்துள்ளனர். அவர்கள் அல்-நஹார் பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். சாபிநகர், வேதத்தீவு மக்களும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர். அதேநேரம் மூதூர், வெருகல், சேருவில பகுதிகளில் உள்ள வயல் நிலங்கள், வீடுகள் கடுமையான அழிவுகளைச் சந்தித்துள்ளன. கால்நடைகளும் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறுபாடுகளை...

- இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையில் தெரிவித்தார்.

அந்த உரையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சவால் மிக்க இயற்கை அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளோம். ஒரே நேரத்தில் நாட்டையே இன்னலுக்குள்ளாக்கிய சம்பவம் இது. இந்தச் சவாலை நாங்கள் வெற்றிகொள்ள வேண்டும். இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தவர்கள் எங்களுக்கு இலக்கமல்ல. அவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் கூறுகிறோம். அந்த குடும்பங்களுக்கு அனைத்து உதவிகளையும் நாங்கள் செய்வோம். காணாமல் போனவர்கள் கூட உயிரோடு இருப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

மீளக்கட்டியெழுப்பும் பணியை நாங்கள் செய்யக் கடமைப்பட்டுள்ளோம். அனர்த்தம் பெரிய இழப்பைத் தந்துள்ளது. ஆனாலும் எமது நாட்டு மக்கள் இப்படியான துன்பங்களை சந்தித்து மீள் எழுச்சி பெற்று வந்துள்ளார்கள். முப்படையினரும் பொலிஸாரும் மேற்கொள்ளும் செயற்பாடுகளும் அரச அதிகாரிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் பாராட்டுக்குரியவவை.

எமது இந்தச் செயற்பாடுகளுக்கு அண்டை நாடுகள் பெரிதும் உதவ முன்வந்துள்ளன. பாதிக்கப்பட்ட மக்களை காப்பாற்றும் செயற்பாடுகள் நடந்து கொண்டுள்ளன. அனைத்து துறைகளிலும் இந்த அனர்த்தம் தாக்கத்தை செலுத்தியுள்ளதால் அவற்றை கட்டியெழுப்பவேண்டும். அவசர காலச் சட்டம் இந்த அனர்த்தத்துக்குத் தேவையான வகையில் பயன்படுத்தப்படுமே தவிர அது வேறெந்த நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்பட மாட்டாது. நாடு முன்னர் இருந்த நிலைக்கு கொண்டுவரப்படும். வெளிநாட்டு வாழ் இலங்கையர்கள் எமக்கு உதவ முன்வந்துள்ளனர். வலுவான நிதியமொன்றை ஆரம்பிக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும்போதும், அவற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் போகும்போதும் ஏற்படும் இழப்புகள் மற்றும் அவசரகால அனர்த்தங்களை நிர்வகித்தல், மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டுவருதல் அல்லது முன்பு இருந்ததை விட மேம்பட்ட நிலைக்குக் கொண்டுவருதல் ஆகிய மூன்று கட்டச் செயன்முறைக்கும் அரசாங்கமே பொறுப்பாகும். அதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளை, நிலைமை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும், மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

நாம் இதுவரை கண்டிராத மிகப்பெரிய மறுசீரமைப்பு முன்னெடுப்பு மற்றும் மீளக் கட்டியெழுப்பும் பணியை எதிர்கொள்ள வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அழிவின் அளவை மதிப்பிடுவது மிகவும் பாரதூரமானது. ஆனால், வெள்ளம், புயல் அல்லது ஏதேனும் பேரழிவுக்குப் பின்னர், நம் நாட்டு மக்களின் முதல் பணியாக அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் உயிரைக் காப்பாற்றுவதும், அவர்களுக்குத் தேவையான உடனடி நிவாரணத்தை வழங்குவதுமாகவே உள்ளது. அதற்காக, எங்கள் முழு அரச பொறிமுறையையும் மிகவும் திறமையாக வழிநடத்த முயற்சி செய்தோம்.

சில சுற்றறிக்கைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் தடைகளை ஏற்படுத்தியுள்ளன. அந்த சுற்றறிக்கைகளை நாங்கள் மாற்றியுள்ளோம். ஒரு பிரதேச செயலாளருக்கு 500 இலட்சம் ரூபா வரை செலவிட அனுமதி அளித்துள்ளோம். கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் நிறைவேற் றப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 3,000 கோடி ரூபா எங்களிடம் உள்ளது. அதை நாங்கள் நாடாளுமன்றத்தின் அனுமதி இல்லாமல் செலவிட முடியும். அதை இந்த செயற்பாட்டிற்காக ஒதுக்கியுள்ளோம். மாவட்ட செயலாளர்களுக்கு எவ்வளவு பணம் தேவையோ அதையெல்லாம் வழங்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.

நமது நாட்டைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான நிதியை நாம் பல்வேறு வழிகளில் பெற்றுக் கொள்ள முடியும். எங்கள் நட்பு நாடுகளுடன் மிக நெருக்கமாகப் பணியாற்றி அவர்களின் உதவியைப் பெறுதல், பல்வேறு சர்வதேச அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு அவர்களின் உதவியைப் பெறுதல், உள்நாட்டு வர்த்தகர்கள் மற்றும் தொழிலதிபர்களுடன் கலந்துரையாடி அவர்களின் உதவியை நாடுதல் ஊடாக அதைப் பெறலாம். இலங்கைக்கு வெளியே வசிக்கும் இலங்கையர்கள் உதவியை வழங்க கடுமையாக உழைத்து வருகின்றனர். அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளனர். அவர்களுக்குத் தேவையான ஆதரவை வழங்க நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்த அனர்த்தத்திலிருந்து மீள்வதற்கு ஒரு வலுவான நிதியமொன்றை உருவாக்க வேண்டும்.

இந்தப் பேரழிவு நடந்துள்ள தருணத்தில், நாட்டுக்காக அனைத்து அரசியல் வேறுபாடுகளையும் மறப்போம். இனம், மதம், கட்சி அல்லது நிற வேறுபாடுகள் இல்லாமல் ஒன்றுபடுவோம். எமக்கு அரசியல் செய்ய நிறைய நேரம் இருக்கிறது. பெரும் அனர்த்தத்தை எதிர்கொள்ள அதிக நேரம் கிடையாது. ஒன்றாக இணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவோம். நாட்டைக் கட்டியெழுப்பிய பின்னர், தனித்தனியாக அரசியல் செய்ய முடியும். இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதில் நான் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் பணியாற்றி வருகிறேன். நமது நாட்டின் பிரஜைகள் தொடர்பில் முழுமையான நம்பிக்கை எனக்குள்ளது. நமது நாட்டின் முப்படைகள், பொலிஸார் மற்றும் நமது நாட்டின் அரச சேவை மீது எனக்கு நம்பிக்கை உள்ளது.

எமக்கு உதவ முன்வந்துள்ள நாடுகள் ,அமைப்புகளுக்கு நன்றியை தெரிவிக்க விரும்புகிறேன். அரசியல் பேதங்களை மறந்து இன, மத பேதமின்றி நாம் ஒன்று சேர்ந்து செயற்படுவோம். நாட்டைக் கட்டியெழுப்பிய பின்னர் பின்னர் நாங்கள் அரசியலைச் செய்வோம். நாட்டை கட்டியெழுப்பும் இந்த முயற்சிக்கு ஒத்துழைக்க நான் அழைப்பு விடுக்கிறேன்.

குறுகிய வேறுபாடுகள் இல்லாமல் இந்த கூட்டு முயற்சியில் சேர அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம். ஒரு தேசிய மற்றும் சர்வதேச திட்டத்தின் மூலம், சிறந்த ஒருங்கிணைப்புடன் செயல்பட்டு நமது மனசாட்சிக்கு அமைவாக எதிர்பார்க்கும் இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிக்குமாறு கோருகிறேன். எந்த இருளிலும் ஒளி பிறக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். இந்த இருண்ட நாள்கள் கடந்து போகும் என்றும் நாங்கள் நம்புகிறோம். எனவே, நாம் ஒன்றாக எழுச்சி பெறுவோம். கண்ணீர் விடும் இந்த அழகிய தேசத்தை குணப்படுத்துவோம். சுபீட்சமான நாட்டை உருவாக்குவோம் - என்றார். (அ-எ-இ)

## 10,000க்கு...

ஆயிரத்து 550 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 594 பேர் 42 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 2 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 400 பேர் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே மேற்கண்ட தகவல்களை வழங்கினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான முழுமையான கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்துள்ள அவர், முல்லைத்தீவு மாவட்டத்துக்கான தொலைத்தொடர்பு வசதிகள் முற்றாகத் துண்டிக்கப்பட் டுள்ளதால் கணக்கெடுப்புக்களை மேற் கொள்வது தாமதமாகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது முல்லைத்தீவு மாவட்டத்தில் 30 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களின் இயல்பு நிலை மிகமோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 45ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் அவை முற்றாக அழிவதற்கான வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன.

முத்தையன்கட்டு குளம், வவுனிக்குளம், தண்ணிமுறிப்பு குளம் வான்பாய்கின்றன. போக்குவரத்து பல இடங்களில் தடைப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் இருந்து பரந்தன் ஊடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது. நாயாறுபாலம் உடைந்துள்ளதால் கொக்கிளாய், வெலிஓயா போன்ற இடங்களுக்கு செல்லமுடியாதுள்ளது. இடம்பெயர்ந்து முகாம்களில் உள்ளவர்களுக்கு சமைத்த உணவு, பல தரப்பினரின் ஒத்துழைப்புடன் வழங்கப்பட்டு வருகின்றது.

நித்தகைக்குளம் சீரமைப்பு வேலைகளுக்காக வந்த இருவர் தற்போதும் அந்தப் பிரதேசத்தில் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளனர். அவர்களை மீட்கும் நடவடிக்கை கடினமாக இருக்கின்றது.

ஒட்டுசுட்டான் கமநல சேவைக்குட்பட்ட கோடாலிக்கல்லு குளம் முழுமையாகச் சேதமடைந்துள்ளது. வட்டுவாகல் பாலத்தின் ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. நாயாறு பாலத்தைத் தற்காலிகமாகத் திருத்த 4 நாள்கள் வரை எடுக்கும் என்று வீதி அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது. வட்டுவாகல் பால சீரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதனூடான போக்குவரத்தை சில நாள்களில் ஆரம்பிக்க முடியும்என்றார். (அ-எ-19)

## பட்டப்பகலில்...

சைக்கிளில் வந்த நால்வர் திருநெல்வேலிச் சந்தியில் வழிமறித்து மோட்டார் சைக்கிளின் பின்புறம் இருந்தவர் மீது சரமாரியாக வாள்வெட்டு நடத்தியுள்ளனர். இந்த இளைஞர் மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கித் தப்பியோடியபோதும் சுமார் 50 மீற்றர் வரையில் துரத்திச் சென்ற அந்தக் கும்பல் தாக்கியுள்ளது. இறுதியில் வர்த்தக நிலையம் ஒன்றின் முன்பாக விழுந்த இளைஞர் மீது சரமாரியாக வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய கும்பல், அந்த இளைஞரின் கால் ஒன்றைக் கணுக்காலின் கீழ் வெட்டித் துண்டாக்கியது. அதன்பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றது.

இரத்த வெள்ளத்தில் வீழ்ந்து கிடந்த இளைஞரை அங்கிருந்தவர்கள் அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மருத்துவமனையில் அந்த இளைஞர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இந்தச் சம்பவம் முன்பகை காரணமாக நடந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

உயிரிழந்த இளைஞர் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப் பட்டவராவார். இவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் கையொப்பம் இடவேண்டும் என்றநிபந்தனையில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார். நேற்று கையொப்பமிட சென்றபோதே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. (அ-எ-26)

2ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 30 . 07 . 1957



இறப்பு 23 . 11 . 2023

அமரர் இராமலிங்கம் ஞானசேகரன் (சேகர்)

(புங்குடுதீவு 1ம் வட்டாரம், முன்னாள் வர்த்தகர் (திருநெல்வேலி, MGR CD கடை உரிமையாளர் - நல்லூர்)

திதி – பூர்வபக்க ஏகாதசி

புங்கை நகரிலே பூத்த புண்ணியவானே
பூத்ததுமே புன்னகை கொண்ட உலகமதில்
புண்களை மட்டும் தந்ததேனோ?
ஆண்டிரண்டு ஓடினாலும் ஆறாத காயமிது
ஆற்றத்தான் ஆளிருந்தும் அனைவருக்கும்
நிகராகுமே உங்கள் இழப்பு
கூவிக் கூவி அழைக்கவும்
கொஞ்சிப் பேசிக் கதைக்கவும்
கொள்கிறேன் பேராசை – முடியுமா?
முடிந்தால் வாருங்கள் முன்பு போல்
வாழ்ந்திடுவோம்!

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

077 844 8083

(CS 30828) D*

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.12. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org